# மருத்துவம் சார்ந்த கல்வி

தமிழ் நாட்டில் மருத்துவக் கல்வி மற்றும் செவிலியர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசுத்துறையிலும் அரசு அனுமதி பெற்ற சுயநிதி நிறுவனங்களிலும் பல புதிய கல்லூரிகளைத் தொடங்க தமிழக அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. இதனால் மருத்துவக் கல்வியின் பயன் பெறுவோர் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. மருத்துவம் சார்ந்த கல்வித்துறையில் சான்றிதழ் பயிற்சிகளும் பட்டயப் பயிற்சிகளும் அரசு மருத்துவக்கல்லூரிகளில் போதிய அளவில் இல்லாததால் தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களிலும் ஊரகப் பகுதிகளிலும் அரசின் அனுமதி பெறாமல் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் பெருகியுள்ளன. இக்கல்வி நிறுவனங்களில் அதிகப்படியான கட்டணம் செலுத்தி அரசு அங்கீகாரம் இல்லாத சான்றிதழ்களைப் பெற்று தகுந்த வேலை வாய்ப்பின்றி மாணவர்கள் துன்பப்படும் நிலை உள்ளது. இதைப் போக்கும் வகையில் தமிழக அரசு மருத்துவக்கல்லூரிகள் அனைத்திலும் கீழ்கண்ட 11 வகையான மருத்துவத் தொழில் சார்ந்த சான்றிதழ் பயிற்சிகளிலும், பட்டயப்பயிற்சிகளிலும் மாணவர்கள் எண்ணிக்கையை 2760–லிருந்து 5000 ஆக உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது.

ஒரு வருட சான்றிதழ் பயிற்சிகள்

| | | |
|---|---|---|
| 1. | இதய எதிர்மெல் ஒலி இயல் நுட்புனர் | Cardio Sonography Technician |
| 2. | இதய மின் அலை வரைவு நுட்புனர் | ECG / Treadmill Technician |
| 3. | இதய இரத்தச்சுழற்சி(பம்ப்) நுட்புனர் | Pump Technician |
| 4. | இதய உட்புகுத்து ஆய்வக நுட்புனர் | Cardiac Cath Lab. Technician |
| 5. | அவசரக் கவனிப்பு நுட்புனர் | Emergency Care Technician |
| 6. | சுவாசக் கவனிப்பு நுட்புனர் | Respiratory Care Technician |
| 7. | இரத்த சுத்தகரிப்பு நுட்புனர் | Dialysis Technician |
| 8. | மயக்கவியல் நுட்புனர் | Anesthesia Technician |
| 9. | அறுவை அரங்க நுட்புனர் | Theater Technician |
| 10. | முடநீக்கியல் நுட்புனர் | Ortho Technician |
| 11. | சான்றிதழ் பெற்ற நுண்கதிர் உதவியாளர் | C.R.A.(Certified Radiological Assistant) |

இரண்டு வருட பட்டயப்பயிற்சி

| | | |
|---|---|---|
| 12. | மருத்துவ ஆய்வக நுட்புனர் | DMLT(Diploma in Medical Lab. Technology ) |

முந்தைய அரசு மேற்கண்ட பயிற்சிகளை அரசு மருத்துவக்கல்லூரிகளில் தொடங்கும்பொழுது சுயநிதி திட்டத்தின் ஓராண்டு சான்றிதழ் பயிற்சிகளுக்கு ஆண்டுக் கட்டணமாக ரூ.2800/ ம் இரண்டு ஆண்டு பட்டயப்பயிற்சிக்கு ஆண்டுக்கு ரூ.10,000/– ம் மாணவர்களிடம் வசூலிக்க ஆணை வழங்கியது.

மேற்கண்ட கட்டணங்களைச் செலுத்த நடுத்தர, எளிய மக்களால் இயலாத நிலையைக் கருத்தில் கொண்ட இந்த அரசு கல்விக் கட்டணங்களைக் குறைக்க முடிவு செய்து ஒரு ஆண்டு சான்றிதழ் பயிற்சிகளுக்கு மொத்தக் கட்டணமாக ரூ.1450/–ம். இரண்டு ஆண்டு

பட்டயப்பயிற்சிக்கு ஆண்டுக்கு ரூ.1200/– ம் செலுத்திப் படிக்க ஆணை வழங்கியுள்ளது.

மேற்கண்ட மருத்துவம் சார்ந்த பயிற்சிகளும் நடப்பு கல்வி ஆண்டில் 14 மருத்துவக்கல்லூரிகளிலும், சென்னை அரசு கிங் நோய் தடுப்பு நிலையத்திலும் நடத்தப்படும். 16.06.2007 அன்று செய்தித்தாள்களில் இது குறித்த விளம்பரம் வெளியிடப்படும். 18.6.2007 முதல் விண்ணப்பங்கள் மற்றும் தகவல் தொகுப்பேடு அனைத்து அரசு மருத்துவக்கல்லூரிகளிலும், அரசு கிங் நோய்த் தடுப்பு நிலையத்திலும் (டி.எம்.எல்.டி ) வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தகுந்த இணைப்புகளுடன் உரிய மருத்துவக்கல்வி நிலையத்தில் சேர்ப்பிக்க கடைசி நாள் 30.06.2007 .

ஓராண்டு சான்றிதழ் பயிற்சிகளில் சேர பள்ளி உயர்நிலை தேர்வில் விஞ்ஞான பாடங்களும் சான்றிதழ் பெற்ற நுண்கதிர் உதவியாளர் பயிற்சிக்கு விஞ்ஞானப்பாடங்களுடன் கணிதமும் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மருத்துவ ஆய்வக நுட்புனர் பயிற்சிக்கு விஞ்ஞான பாடங்களில் சாதி வகுப்பினருக்கு உரிய மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட அனைத்து மருத்துவம் சார்ந்த பயிற்சிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசு முத்திரையுடன் கூடிய சான்றிதழ் வழங்கப்படும்.

தனியார் மருத்துவமனைகளிலும் வெளிநாடுகளிலும் அந்தந்தத் துறையில் வேலை வாய்ப்பு பெற பெரிதும் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள். மேலும் தமிழக அரசால் அங்கீகாரம் பெறாத பயிற்சிகளிலோ, நிறுவனங்களிலோ சேர வேண்டாம் என்றும், தமிழக அரசால் ஆணை வழங்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் மட்டும் சேருமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். 4/6

மருத்துவக்கல்வி – மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் பற்றாக்குறையை போக்க பேராசிரியர்கள் / இளம் பேராசிரியர்களை தொகுப்பூதியத்தில் ஒப்பந்த முறையில் பணியமர்த்துதல்.

-------

இந்திய மருத்துவக் குழுமம், மருத்துவக் கல்லூரி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் பணியாற்றும் மருத்துவக் கல்வி ஆசிரியர்களின் பெயர் உள்ளிட்ட தகவல்களை வலை தளத்தில் வெளியிடுவதற்காக கோரியுள்ளது.

மருத்துவக் கல்லூரிகளில் சிகிச்சை சாரா துறைகள் ( Non Clinical) மற்றும் பற்றாக்குறையுள்ள(Scarce) சிகிச்சை சார்ந்த(Clinical) துறைகளான ஊடுகதிர்வீச்சு துறை , மயக்க மருந்தியல் துறை, மார்பக மருத்துவதுறை, மன நலத்துறை மற்றும் பல் சிகிச்சை துறை ஆகியவற்றில் மருத்துவ ஆசிரியர்களின் பற்றாக்குறை உள்ளது.

இப் பற்றாக் குறையைப் போக்க அரசாணை எண். 333 சுகாதாரம், நாள் 28.09.2004ல் மேற்கூறிய சிகிட்சை சாராத மற்றும் பற்றாக்குறையுள்ள சிகிட்சை சார்ந்த மேற்குறிப்பிட்டுள்ள துறைகளில் ஆசிரியர்களை தொகுப்பூதியத்தில் ஒப்பந்த முறையில் பணியமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது (பேராசிரியர்களுக்கு ரூ.30,000/–, இளம் பேராசிரியர்களுக்கு ரூ.25,000/–, உதவி பேராசிரியர்களுக்கு ரூ.20,000/– போதகர்களுக்கு ரூ.15,000/– ம் தொகுப்பூதியமாக வழங்க ஆணையிடப்பட்டது). இதன்படி 4 சிகிட்சை சாரா ஆசிரியர்களும் 1 சிகிட்சை சார்ந்த ஆசிரியரும் நியமனம் செய்யப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட சிகிட்சை சாரா மற்றும் பற்றாக்குறையுள்ள சிகிட்சை சார்ந்த துறைகளில் ஆசிரியர்களின் தேவை அதிகம் உள்ளதால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை ஈர்க்க தனியார் மருத்துவக்கல்லூரிகள் அதிக ஊதியம் மற்றும் படிகளை வழங்குகின்றன. இந்நிலையில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் இந்திய மருத்துவக் குழும விதிகளின்படி தேவைப்படும் ஆசிரியர்களை நியமிக்க இயலாத நிலை உள்ளதால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை நியமனம் செய்யும் தேவை ஏற்பட்டுள்ளது.

ஏனவே அரசு மருத்துவக்கல்லூரிகளிலும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை ஈர்க்க

1) உடற்கூறு இயல் துறை, சமூகம் சார்ந்த நோய்த்தடுப்புத்துறை,) ரூ.50,000/–ம்
மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையின் பேராசிரியர்கள் )
/இளம் பேராசிரியர்களுக்கு

2) உயிர் வேதியியல், மருந்தாக்கியல், உடல் இயங்கியல் ) ரூ.45,000/–ம்
பேராசிரியர்கள்/இளம் பேராசிரியர்களுக்கு )

3) நுண்உயிரியல், நோய்க்குறியியல் துறை பேராசிரியர்கள்/ ) ரூ.40,000/–ம்
இளம் பேராசிரியர்களுக்கு )

4) மயக்கமருந்தியல், மனநல மருத்துவம், காசநோய் மற்றும் ) ரூ.35,000/– ம்
மார்பகநோய்துறை, ஊடுகதிர்வீச்சுத்துறை, இயண்முறை )
மருத்துவத்துறை பேராசிரியர்கள்/இளம் பேராசிரியர் )
களுக்கு

தொகுப்பூதியமாக வழங்கவும், 25 விழுக்காடு பேராசிரியர்கள்/இளம் பேராசிரியர்களை மேற்குறிப்பிட்டுள்ள தொகுப்பூதிய விகிதத்தில் ஒப்பந்த முறையில் நியமணம் செய்து கொள்ளவும் மேலும் அவர்கள் பெற்றுவரும் ஓய்வுதியத்துடன் மேற்குறிப்பிட்டுள்ள தொகுப்பூதியத்தைப் பெறவும் அரசாணை எண.143, சுகாதாரம், நாள் 30.4.2007ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

# மருத்துவ கல்வித் துறை

தமிழ்நாடு அரசின் சுகாதாரத் துறையின் உரிய அனுமதி இன்றியும் மத்திய அரசின் ஒப்புதல் பெற்றதாகவும் பல தனியார் நிறுவனங்கள் மருத்துவம் சார்ந்த கல்வி பயிற்சிகள் மற்றும் செவிலியர் பயிற்சிகளை நடத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

இத்தகைய நிறுவனங்கள் தமிழ்நாடு அரசின் அனுமதி பெறாததால் செவிலியர் பயிற்சிகள், மருத்துவ ஆய்வக நுட்பனர் பயிற்சிகள் மற்றும் பிற மருத்துவம் சார்ந்த கல்விப் பயிற்சிகளை நடத்துவது தவறு என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் வழங்கும் சான்றிதழ்கள் போலியானதாகக் கருதப்படும். மேலும் தமிழ்நாடு அரசின் அனுமதி பெறாமல் நடத்தப்படும் இத்தகைய கல்வி நிறுவனங்கள் மீது தமிழக அரசால் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இத்தகைய நிறுவனங்களில் மாணவர்கள் யாரும் சேரவேண்டாம் என்று பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தமிழக அரசின் அங்கீகாரம் பெற்ற கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்கள் மருத்துவம் சார்ந்த கல்விப் பயிற்சி நிலையங்கள் நடத்தும் பயிற்சிகள் வருமாறு, 14 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு கிங் நோய் தடுப்பு மருத்துவ நிலையம்.

ஒரு வருட சான்றிதழ் பயிற்சிகள்

| | | |
|---|---|---|
| 1. | இதய எதிர்மெல் ஒலி இயல் நுட்பனர் | Cardio Sonography Technician |
| 2. | இதய மின் அலை வரைவு நுட்பனர் | ECG/ Treadmill Technician |
| 3. | இதய இரத்தச் சுழற்சி (பம்ப்) நுட்பனர் | Pump Technician |
| 4. | இதய உட்புகுத்து ஆய்வக நுட்பனர் | Cardiac Cath Lab. Technician |
| 5. | அவசரக் கவனிப்பு நுட்பனர் | Emergency Care Technician |
| 6. | சுவாசக் கவனிப்பு நுட்பனர் | Respiratory Care Technician |
| 7. | இரத்த சுத்திகரிப்பு நுட்பனர் | Dialysis Technician |
| 8. | மயக்கவியல் நுட்பனர் | Anesthesia Technician |
| 9. | அறுவை அரங்க நுட்பனர் | Theater Technician |
| 10. | முடநீக்கியல் நுட்பனர் | Ortho Technician |
| 11. | சான்றிதழ் பெற்ற நுண்கதிர் உதவியாளர். | C.R.A. (Certified Radiological Assistant) |

இரண்டு வருட பட்டயப்பயிற்சி

| | | |
|---|---|---|
| 12. | மருத்துவ ஆய்வக நுட்பனர் | DMLT (Diploma in Medical Lab. Technology) |

| | | |
|---|---|---|
| விளம்பரம் வெளியிடும் நாள் | : | 16.06.2007 |
| விண்ணப்பங்கள் வழங்கப்படும் நாள் | : | 18.06.2007 முதல் 28.06.2007 வரை |
| பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க இறுதி நாள் | : | 30.06.2007 |